SALCO
South Asian Legal Clinic of Ontario

# எல்லைக்குட்படுத்தும் உத்தரவுகள்

## எல்லைக்குட்படுத்தும் உத்தரவு (restraining order) என்றால் என்ன?

யாராவது உங்களைத் துன்புறுத்துவார்கள் என்று நீங்கள் பயந்தால், உங்களைப் பாதுகாக்க நீதிமன்றத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய சட்ட உத்தரவுகள் உள்ளன. இவை பாதுகாப்பு உத்தரவுகள் எனப்படும். எல்லைக்குட்படுத்தும் உத்தரவு என்பது ஒரு வகையான பாதுகாப்பு உத்தரவாகும். உங்கள் துணைவர் அல்லது முன்னாள்த் துணைவர் உங்களுக்கு அல்லது உங்கள் பிள்ளைகளுக்குத் தீங்கு விளைவிக்கலாம் என்று நீங்கள் பயந்தால், குடும்ப நீதிமன்றத்தில் எல்லைக்குட்படுத்தும் உத்தரவு ஒன்றை வழங்குமாறு நீங்கள்

கேட்டுக்கொள்ளலாம். இது எந்தவொரு வன்முறையையும் தடுப்பதற்குத் துணைவர் அல்லது முன்னாள்த் துணைவர் ஒருவர் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் ஒரு ஆவணமாகும்.

சமாதானப் பிணை (peace bond) என்று அழைக்கப்படும் மற்றொரு வகையான பாதுகாப்பு உத்தரவும் இங்கு உள்ளது. இது, யாராவது உங்களை, உங்கள் குடும்பத்தை, உங்கள் செல்லப்பிராணிகளைக் காயப்படுத்துவார்கள் அல்லது உங்கள் சொத்துக்களைச் சேதப்படுத்துவார்கள் என்று நீங்கள் பயந்தால், குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உத்தரவாகும். இது அமைதியையும் நல்நடத்தையையும் நிலைநாட்டுவதற்காகக் கையெழுத்திடப்படக் கோரும் ஒரு வாக்குறுதியாகும். பக்கத்து வீட்டுக்காரர், உடன்பிறந்தவர், நண்பர் அல்லது சக பணியாளர் போன்ற எவருக்கும் எதிராக நீங்கள் சமாதானப்

SALCO
South Asian Legal Clinic of Ontario

பிணை ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒன்ராறியோவின் குடும்பநல அதிகாரச் சட்டத்தின் கீழ், துணைவர் அல்லது முன்னாள்த் துணைவர் ஒருவருக்கு எதிராக மட்டுமே நீங்கள் எல்லைக்குட்படுத்தும் உத்தரவைப் பெற்றுக்கொள்ள முடியும். சமாதானப் பிணைகள் பொதுவாக ஒரு வருடத்திற்குத் தான் வழங்கப்படுகின்றன, அதே நேரத்தில் எல்லைக்குட்படுத்தும் உத்தரவுகள் கூடுதல் காலத்துக்கு நிரந்தரமானதாக இருக்கும். சமாதானப் பிணை ஒன்று உங்களிடம் ஏற்கனவே இருந்தாலும், நீண்ட காலத்திற்கு நீங்கள் பாதுகாப்புக் கோரினால், குடும்ப நீதிமன்றத்தில் எல்லைக்குட்படுத்தும் உத்தரவுக்கும் விண்ணப்பிக்கலாம்.

குடும்ப நீதிமன்றத்தில் எல்லைக்குட்படுத்தும் இந்த உத்தரவைப் பெற்றுக்கொள்வதற்கு  நீங்கள் குடும்ப நீதிமன்றச் செயல்முறை ஒன்றைத் தொடங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை.

## எல்லைக்குட்படுத்தும் உத்தரவு ஒன்று எந்த வகையான கட்டுப்பாடுகளைப்  போடமுடியும்?

**இது பின்வருவனவற்றில் கட்டுப்பாடுகளைப் போடமுடியும்:**

- உங்கள் துணைவர் அல்லது முன்னாள்த் துணைவர் எங்கு செல்ல முடியும்
- அவர் என்ன செய்ய முடியும்
- அவர் யாரைத் தொடர்பு கொள்ள முடியும்

**உதாரணம் 1:** உங்கள் பிள்ளையின் பாடசாலையிலிருந்து 300 மீற்றர் தூரத்துக்குள் அவரால் போக முடியாது

**உதாரணம் 2:** அவர் உங்களிடமிருந்து 500 மீற்றர் தொலைவில் இருக்க வேண்டும் மேலும் உங்களுடன் அல்லது உங்கள் பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ள முடியாது

**உதாரணம் 3:** உங்கள் வீடு அல்லது நீங்கள் வேலை செய்யும் இடத்திலிருந்து 500 மீற்றருக்குள் அவரால் போக முடியாது

## எல்லைக்குட்படுத்தும் உத்தரவை யார் கேட்க முடியும்?

**உங்களுக்குப் பின்வரும் நிலைமைகள் ஒன்று இருந்தால், குடும்பநல அதிகாரச் சட்டத்தின் கீழ் ஒருவருக்கு எதிராக எல்லைக்குட்படுத்தும் உத்தரவுக்கு விண்ணப்பிக்க முடியும்:**

- நீங்கள் அவரை முன்பு  திருமணம் செய்திருந்தீர்கள்
- நீங்கள் தற்போது அவருடன் திருமண பந்தத்தில் இருக்கிறீர்கள்
- நீங்கள் தற்போது அவருடன் சேர்ந்து வாழ்கிறீர்கள் அல்லது எந்தக் காலகட்டத்திலாவது அவருடன் வாழ்ந்திருக்கிறீர்கள்
- உங்களுக்கும் அவருக்கும் பிறந்த பிள்ளை ஒருவர் உங்களுடன் இருக்கின்றார்

## எல்லைக்குட்படுத்தும் உத்தரவைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு?

**உங்கள் விண்ணப்பத்திற்காக எந்த நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும் என்பதைக் கண்டறியவும். இது பின்வருவனவற்றைச் சார்ந்தது:**

- நீங்கள், உங்கள் துணைவர் அல்லது முன்னாள்த் துணைவர் அல்லது உங்கள் பிள்ளைகள் வசிக்கும்

SALCO
South Asian Legal Clinic of Ontario

இடம் மற்றும்
• நீங்கள் கையாள வேண்டியுள்ள வேறு குடும்பச் சட்டச் சிக்கல்கள்

பொதுவாக, நீங்கள், உங்கள் துணைவர் அல்லது முன்னாள்த் துணைவர் வசிக்கும் நகராட்சியில் விண்ணப்பிக்கலாம். ஆனால் உங்கள் விண்ணப்பம் உங்கள் பிள்ளைகளுடன் சம்பந்தப்பட்ட  பிரச்சினைகளான பெற்றோருக்குரிய ஏற்பாடுகள் போன்றவற்றைக் கையாள்வதாக இருந்தால், உங்கள் பிள்ளை வசிக்கும் நகராட்சியில் விண்ணப்பிக்கலாம்.

ஒன்ராறியோவில் 3 நீதிமன்றங்கள் குடும்பச் சட்டத்தைக் கையாளுகின்றன – ஒன்ராறியோ நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் குடும்பச் சட்டப் பிரிவு.  இவை  அனைத்தும் உங்களுக்கு எல்லைக்குட்படுத்தும் உத்தரவொன்றை வழங்கலாம், ஆனால் அவை அனைத்தும் ஏனைய குடும்பச் சட்டச் சிக்கல்கள் யாவற்றையும் கையாள்வதில்லை. நீங்கள் தீர்க்க வேண்டிய ஏனைய குடும்பச் சட்டப் பிரச்சினைகளைக் கையாள்வதற்குப் பொருத்தமான நீதிமன்றத்திற்கு நீங்கள் செல்ல வேண்டும்.

**பொருத்தமான நீதிமன்றத்தை நீங்கள் தீர்மானித்தவுடன், பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:**

• நீதிமன்ற செயல்முறையைத் தொடங்குவதற்குரிய விண்ணப்பமாகிய  (பொதுவானது) படிவம் 8 ஐப் பூர்த்தி செய்து நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும். உங்கள் விண்ணப்பத்தில் ஏனைய குடும்பச் சட்டச் சிக்கல்களைத் தீர்க்குமாறும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம் அல்லது:

SALCO
South Asian Legal Clinic of Ontario

• நீதிமன்ற செயல்முறையைத் தொடங்குவதற்குரிய விண்ணப்பமாகிய  (பொதுவானது) படிவம் 8 ஐப் பூர்த்தி செய்து நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும். உங்கள் விண்ணப்பத்தில் ஏனைய குடும்பச் சட்டச் சிக்கல்களைத் தீர்க்குமாறும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம் அல்லது:

• எல்லைக்குட்படுத்தும் உத்தரவு உங்களுக்கு அவசரமாகத் தேவைப்பட்டால், நீதிமன்றத்தில் ஒரு பிரேரணையுடன் சேர்த்து விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும். இந்த நிலையில், படிவம் 8: விண்ணப்பம் (பொதுவானது), படிவம் 14: பிரேரணை குறித்த  அறிவிப்பு, படிவம் 14A: உறுதிமொழி (பொதுவானது) ஆகியவற்றை நீங்கள் நிரப்ப வேண்டும். (ஒரு பிரேரணை என்பது ஒரு விவகாரத்தின் மீது இறுதித் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் ஒரு உத்தரவைப் பிறப்பிக்கும்படி நீதிபதியைக் கோரும் ஒரு செயல்முறையாகும்)

• சட்ட ஆவணங்களை முறையாக வழங்க வேண்டும், அதாவது உங்கள் துணைவர் அல்லது முன்னாள்த் துணைவருக்கு ஆவணங்களின் பிரதியொன்றை வழங்குவதன் மூலம் நீங்கள் நீதிமன்ற வழக்கு ஒன்றைத் தொடங்கியுள்ளீர்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

• உங்கள் வழக்கை விளக்குவதற்கு நீதிமன்றத்தில் சமூகமளிக்க வேண்டும். உங்களுக்கு உடனடி ஆபத்து இருந்தால், உங்கள் துணைவர் அல்லது முன்னாள்த் துணைவர் எங்கே என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், அல்லது அவர்களுக்கு அறிவிப்பை வழங்கினால் தீங்கு ஏற்படும் அபாயம் அதிகரிக்கும் என்று நீங்கள் பயந்தால், நீங்கள் "அறிவிப்பு இல்லாமல் பிரேரணை" கொண்டு வரலாம். இதன் பொருள்

SALCO
South Asian Legal Clinic of Ontario

நீங்கள் எல்லைக்குட்படுத்தும் உத்தரவுக்கு விண்ணப்பித்திருப்பது அவர்களுக்குத் தெரியவராது, மேலும் அவர்கள் தங்கள் தரப்புக் கதையைச் சொல்வதற்கு நீதிமன்றத்தில் இருக்க மாட்டார்கள். இந்த நிலையில், நீதிபதி உங்கள் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே எல்லைக்குட்படுத்தும் தற்காலிக உத்தரவு ஒன்றை வழங்குவார். இரு தரப்பினரினதும் விசாரணைக்கு நீதிமன்றத் திகதி ஒன்றைப் பின்னர் நீதிபதி நிர்ணயிப்பார்.

### எல்லைக்குட்படுத்தும் உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டவுடன்:

- நீதிமன்றம் ஒரு நபருக்கு எதிராக எல்லைக்குட்படுத்தும் இடைக்கால (தற்காலிக) அல்லது இறுதியான உத்தரவு ஒன்றை நடைமுறைப்படுத்தக்கூடும்
- எல்லைக்குட்படுத்தும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அல்லது தனிநபர், அந்த உத்தரவைப் பின்பற்றாமலும் ஒத்துழைக்காமலும் விட்டால், காவற்துறை அவர்களைக் கைது செய்து குற்றஞ்சாட்டக்கூடும்
- எல்லைக்குட்படுத்தும் இடைக்கால உத்தரவு ஒன்று காலாவதியானதும், அந்தத் தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அந்த நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டியதில்லை
- எல்லைக்குட்படுத்தும் இடைக்கால உத்தரவு காலாவதியாகும் முன்னர் அதன் விதிமுறைகளை நீங்கள் மாற்ற விரும்பினால், நீங்கள் கட்டாயமாக நீதிமன்றத்தின் மூலம் ஒரு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்

SALCO
South Asian Legal Clinic of Ontario

• எல்லைக்குட்படுத்தும் இறுதி உத்தரவின் விதிமுறைகளை நீங்கள் மாற்ற விரும்பினால், நீங்கள் கட்டாயமாக நீதிமன்றத்தின் மூலம் ஒரு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்
• எல்லைக்குட்படுத்தும் இறுதி உத்தரவு ஒன்று நிரந்தரமாக இருக்கக்கூடும் அல்லது நீதிபதி நிர்ணயித்த திகதியில் முடிவடையக்கூடும். ஒரு நீதிபதி நிர்ணயித்த திகதியில் அல்லது உங்கள் குடும்பச் சட்ட வழக்கு காலாவதியாகும் போது எல்லைக்குட்படுத்தும் தற்காலிக உத்தரவுகள் முடிவடையும்.

**உங்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்:**

எல்லைக்குட்படுத்தும் உத்தரவு ஒன்று இருப்பதால் உங்கள் துணைவர் அல்லது முன்னாள்த் துணைவர் உங்களுக்குத் தீங்கு செய்ய முயற்சிக்க மாட்டார் என்று அர்த்தமல்ல. அத்துடன், எல்லைக்குட்படுத்தும் உத்தரவைப் பெற்றுக்கொள்வதற்கும் நேரமாகக்கூடும். ஒரு பாதுகாப்புத் திட்டத்தை வைத்திருப்பது மிகவும் முக்கியமாகும். பாதுகாப்புத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான உதவியைப் பெறுவதற்கு, சமூக நிறுவனம் அல்லது காப்பகத்தைத் தொடர்புகொள்ளவும்.